புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat, Near KFC Moolakulam, Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 T/TN/2026/0316/6130/1505

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 • இதழ்: 261 • 27-03-2026 • வெள்ளி • பக்கம்- 4 • விலை- ரூ.5 • திருச்சி- புதுச்சேரி

Volume 01 • Issue: 261 • 27-03-2026 • Friday • Pages - 4 • Price- Rs. 5 • Trichy-Puducherry


## ஆந்திராவில் பேருந்து- லாரி மோதி விபத்து: 13 பேர் பலி, 25 பேர் காயம்



மார்க்கபுரம்: மார்ச்.27–

ஆந்திரப் பிரதேச மாநிலத்தின் மார்க்கபுரம் மாவட்டத்தின் ராயவரம் பகுதியில், நேற்று (மார்ச் 26) அதிகாலையில் பேருந்து மீது லாரி மோதிய விபத்தில் 13 பேர் உயிரிழந்தனர், 25 பேர் காயமடைந்தனர்.

இந்த விபத்து குறித்துப் பேசிய மார்க்கபுரம் மாவட்டப் பொறுப்பு ஆட்சியர் பி. ராஜா பாபு, "பேருந்தில் பயணித்த 41 பயணிகளில், 13 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்; அவர்களது உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. காயமடைந்து மார்க்கபுரத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள 25 பேரில், 10 பேர் பலத்த காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும், இதில் 5 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. கவலைக்கிடமான நிலையில் உள்ள அந்த 5 பேரும் குண்டூர் அரசுப் பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்" என்று தெரிவித்தார்.

காவல்துறை அதிகாரிகளின் தகவலின்படி, காலை 5:30 மணி முதல் 6:00 மணிக்குள், ஒரு வளைவுப் பாதையில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. அப்போது, கனிகிரியிலிருந்து சரளைக் கற்களை ஏற்றிக்கொண்டு வந்த ஒரு டிப்பர் லாரி மீது, தனியார் சுற்றுலாப் பேருந்து மீது நேருக்கு நேர் மோதியது. விபத்துக்குள்ளான அந்தப் பேருந்து ஹரிகிருஷ்ணா டிராவல்ஸ் நிறுவனத்திற்குச் சொந்தமானது. இந்தப் பேருந்து தெலங்கானாவின் நிர்மல் பகுதியிலிருந்து ஆந்திராவின் நெல்லூர் மாவட்டத்தில் உள்ள விஞ்சமூருக்குப் பயணித்துக் கொண்டிருந்தது.

விபத்து குறித்து குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு வெளியிட்ட இரங்கல் செய்தியில், "ஆந்திர பிரதேச பஸ் விபத்து பற்றி அறிந்து ஆழ்ந்த கவலையடைந்தேன். பாதிக்கப்பட்டோரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைந்து திரும்ப வேண்டி கொள்கிறேன்." என்று தெரிவித்துள்ளார்.

அதேபோல், நிவாரண உதவிகளை அறிவித்த பிரதமர் மோடி, விபத்தில் உயிரிழந்த ஒவ்வொருவரின் குடும்பத்துக்கும் தலா ரூ.2 லட்சம் நிவாரணத் தொகையாக வழங்கப்படும் என்றும், காயமடைந்தவர்களுக்கு ரூ.50,000 வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இந்த விபத்து குறித்து தகவல்களை அறிய மார்க்கபுரம் மற்றும் நெல்லூர் மாவட்ட நிர்வாகங்கள் சார்பில் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் தொடர்பு எண்கள்: 6304285613, 9985733999, 7989537285, 9703578434 (மார்க்கபுரம்); 7995575699 மற்றும் 08612331261 (நெல்லூர்).

# தமிழ்நாட்டில் இதுவரை ரூ.189 கோடி மதிப்புள்ள பணம் மற்றும் பொருட்கள் பறிமுதல்

## தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தகவல்

சென்னை. மார்ச்.27–

இந்தியத் தேர்தல் ஆணையத்தால் 15.03.2026 அன்று பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து. தேர்தல் நடத்தை விதிகள் உடனடியாக அமலுக்கு வந்துள்ளன. இவை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.இந்தியா சுற்றுலா

தேர்தலை சுதந்திரமான, நியாயமான மற்றும் அமைதியான முறையில் நடத்துவதை உறுதி செய்வதற்காக, அமலாக்கம் மற்றும் கண்காணிப்புக்கான வலுவான கட்டமைப்பை ஆணையம் நிறுவியுள்ளது.

தேர்தல் நடத்தை விதிகளைச் செயல்படுத்துதல் அனுமதிக்கப்படாத அரசியல் விளம்பரங்களை அகற்றுவதற்கும், பொது மற்றும் தனியார் சொத்துக்களில் உள்ள விளம்பரங்களை நீக்குவதற்கும் மாநிலம் முழுவதும் விரிவான மற்றும் தொடர்ச்சியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.அரசியல் புத்தகம்

தங்கள் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைக்கப்பட்ட அனுமதியற்ற விளம்பரங்கள் சுவரொட்டிகள், பதாகைகள் போன்றவை அகற்றப்பட்டுவிட்டன என்பதையும்,இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதற்கான சான்றளிக்கப்பட்டுள்ளதையும் மாவட்ட தேர்தல் அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்

இந்தியத் தேர்தல் ஆணையம் (ணிசிமி), அசாம், கேரளா, புதுச்சேரி, தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்க மாநிலங்களின் சட்டமன்றங்களுக்கான பொதுத் தேர்தல் மற்றும் 6 மாநிலங்களில் நடைபெறவுள்ள இடைத்தேர்தல்களுக்கான தேர்தல் அட்டவணையை மார்ச் 15, 2026 அன்று அறிவித்துள்ளது. தேர்தல் நடத்தை விதிகளை கண்டிப்பாகப் பின்பற்றுவதை உறுதி செய்யுமாறு மாநில, யூனியன் பிரதேச அரசுகளுக்கு ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

தயார்நிலையை ஆய்வு செய்வதற்கும், ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதற்கும், மேலும் 2026 மார்ச் 24 அன்று வன்முறையற்ற, அச்சுறுத்தலற்ற மற்றும் தூண்டுதலற்ற தேர்தல்களை உறுதி செய்யுமாறு அவர்களுக்கு அறிவுறுத்துவதற்கும், தேர்தல் ஆணையம், தேர்தல் நடைபெறும் 5 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் மற்றும் அவற்றின் 12 எல்லை மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் தலைமைச் செயலாளர்கள், தலைமைச் செயல் அதிகாரிகள், டிஜிபிக்கள் மற்றும் மூத்த அதிகாரிகளுடனும், அமலாக்க முகமைகளின் தலைவர்களுடனும் ஒரு ஆய்வுக் கூட்டத்தை நடத்தியது.

இதை உறுதிசெய்யும் வகையில், புகார்கள் 100 நிமிடங்களுக்குள் கவனிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக, மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் முழுவதும் 5,173க்கும் மேற்பட்ட பறக்கும் படைகள் (Flying Squads) பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இது தவிர, பல்வேறு இடங்களில் திடீர் சோதனைச் சாவடிகளை (Nakas) அமைப்பதற்காக, 5,200க்கும் மேற்பட்ட நிலையான கண்காணிப்புக் குழுக்களும் (SSTs) பணியில் அமர்த்தப்பட்டுள்ளன.

பிப்ரவரி 26ம் தேதி 'மின்னணு பறிமுதல் மேலாண்மை அமைப்பு' (ESMS) செயல்பாட்டிற்கு வந்ததிலிருந்து, மார்ச் 25, 2026 வரை, பல்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள பல அமலாக்க முகமைகளின் ஒருங்கிணைந்த அணுகுமுறை மூலம், ரூ. 408.82 கோடி மதிப்பிலான சட்டவிரோதப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இதில் ரூ. 17.44 கோடி ரொக்கப் பணம், ரூ. 37.68 கோடி மதிப்பிலான மதுபானங்கள் (16.3 லட்சம் லிட்டர்கள்), ரூ. 167.38 கோடி மதிப்பிலான போதைப் பொருட்கள், ரூ. 23 கோடி மதிப்பிலான விலைமதிப்புள்ள உலோகங்கள் மற்றும் ரூ. 163.30 கோடிக்கும் அதிகமான மதிப்பிலான பிற இலவசப் பொருட்கள் ஆகியவை அடங்கும்.

இந்த வழிகாட்டுதல்களை அமல்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் சோதனைகள் மற்றும் ஆய்வுகளின் போது, சாதாரண குடிமக்களுக்கு எவ்வித சிரமமோ அல்லது தொல்லையோ ஏற்படாதவாறு அமலாக்கத் துறை அதிகாரிகள் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று தேர்தல் ஆணையம் வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பான ஏதேனும் குறைகளை நிவர்த்தி செய்வதற்காக மாவட்ட அளவிலான குறைதீர்க்கும் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

குடிமக்கள் மற்றும் அரசியல் கட்சிகள், ணிசிமிழிணிஜி இணையதளத்தில் உள்ள 'C-Vigil' (சிவிஜில்) தொகுதி (Module) வாயிலாக, தேர்தல் நடத்தை விதிமீறல்கள் குறித்த புகார்களைத் தெரிவிக்கலாம்.

மார்ச் 15 முதல் 25 வரையிலான காலகட்டத்தில், பொதுத் தேர்தல்கள் மற்றும் இடைத்தேர்தல்களைச் சந்திக்கும் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில், 'C-Vigil' செயலி (App) வாயிலாக 70,944 புகார்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 70,831 புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தீர்வு காணப்பட்டுள்ளது; மேலும் 67,899 புகார்கள்ஷஅதாவது மொத்தப் புகார்களில் 95.8 சதவீதம்ஷ100 நிமிடங்களுக்குள் தீர்க்கப்பட்டுள்ளன.

புகார்களை நிவர்த்தி செய்வதற்கான ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது; இதில் '1950' என்ற அழைப்பு மைய (Call Centre) எண்ணும் அடங்கும். இந்த எண் வாயிலாக, பொதுமக்கள் அல்லது அரசியல் கட்சிகளைச் சேர்ந்த எவரும், சம்பந்தப்பட்ட மாவட்டத் தேர்தல் அதிகாரி (DEO) அல்லது தேர்தல் நடத்தும் அலுவலரிடம் (RO) நேரடியாகப் புகார்களைப் பதிவு செய்யலாம்

## சென்னையில் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு மார்ச் 28ல் முதல்கட்ட பயிற்சி: மாவட்டத் தேர்தல் அலுவலர் தகவல்

சென்னை: மார்ச்.27–

சென்னை மாவட்டத்துக்கு உட்பட்ட 16 சட்டப் பேரவைத் தொகுதிகளில் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான முதல்கட்ட பயிற்சி வகுப்பு 28ம் தேதி நடைபெற உள்ளது.

இதுகுறித்து மாவட்டத் தேர்தல் அலுவலரும்,



சென்னை மாநகராட்சி ஆணையருமான ஜெ.குமரகுருபரன் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழக சட்டப்பேரவை பொதுத் தேர்தல் ஏப்.23ம் தேதி நடைபெற உள்ளது.

சென்னை மாவட்டத்துக்கு உட்பட்ட 16 சட்டப் பேரவைத் தொகுதிகளில் 978 இடங்களில் மொத்தம் 4,079 வாக்குச்சாவடிகள் உள்ளன. வாக்குச்சாவடி மையங்களில் பணிபுரிய உள்ள 19,594 வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான முதல்கட்ட பயிற்சி வகுப்பு 16 மையங்களில் மார்ச் 28ம் தேதி காலை 9 மணிக்கு நடைபெற உள்ளது.

குறுஞ்செய்தி வாயிலாக..

பெரம்பூர் தொகுதிக்கு வியாசர்பாடியில் உள்ள டாக்டர் அம்பேத்கர் அரசு கலைக் கல்லூரியிலும், கொளத்தூர் தொகுதிக்கு பந்தர் கார்டன் சென்னை உயர்நிலைப் பள்ளியிலும், ராயபுரம் தொகுதிக்கு மேற்கு மாதா சர்ச் சாலையில் உள்ள புனித பீட்டர் உயர்நிலைப் பள்ளியிலும் பயிற்சி வகுப்பு நடைபெறும். அனைத்து தொகுதிகளின் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கும் பயிற்சி வகுப்புக்கான ஆணைகள் நேரடியாகவும், குறுஞ்செய்தி வாயிலாகவும் அனுப்பப்பட்டு வருகிறது.

இந்த பயிற்சி வகுப்பில் அவர்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். இதில் கலந்து கொள்ளாத வாக்குச்சாவடி அலுவலர்கள் மீது தேர்தல் நடத்தை விதிகளின்படி, நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## திருவள்ளூர் மாவட்டத்தில் பறக்கும் படையினர் மற்றும் நிலை கண்காணிப்பு குழுவினரால் ரூ.70.72 கோடி மதிப்பிலான பணம், தங்கம் மற்றும் வைர ஆபரணங்கள் கைபற்றப்பட்டது மாவட்ட தேர்தல் அலுவலர் மு.பிரதாப் தகவல்

திருவள்ளூர் மார்ச் 27 :

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026, திருவள்ளூர் தேர்தல் மாவட்டத்திற்குட்பட்ட கும்மிடிப்பூண்டி, பொன்னேரி, திருத்தணி, திருவள்ளூர், பூந்தமல்லி, ஆவடி, மதுரவாயல், அம்பத்தூர், மாதவரம் மற்றும் திருவொற்றியூர் ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் கால அட்டவணை கடந்த 15.03.2026 அன்று இந்திய தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்டு தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்துள்ளது.

அதனைத் தொடர்ந்து திருவள்ளூர் தேர்தல் மாவட்டத்திற்குட்பட்ட பத்து சட்டமன்ற தொகுதிகளிலும் தேர்தல் கண்காணிப்பு பணிகளை தீவிரமாக கண்காணித்திட ஒவ்வொரு தொகுதிக்கும் மூன்று பறக்கும் படையினர் மற்றும் மூன்று நிலை கண்காணிப்பு குழுவினர் 8 மணி நேர சுழற்சி முறையில் நியமிக்கப்பட்டுள்ளனர். இது தவிர, திருவள்ளூர் தேர்தல் மாவட்டத்தில் உள்ள ஐந்து செலவினம் அதிகமாக ஏற்படக்கூடும் என கண்டறியப்பட்ட தொகுதிகளில் (பொன்னேரி, திருவள்ளூர், பூந்தமல்லி, ஆவடி மற்றும் திருவொற்றியூர்) கூடுதலாக ஒரு பறக்கும் படையினர் மற்றும் ஒரு நிலை கண்காணிப்பு குழுவினர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி பறக்கும் படையினர் மற்றும் நிலை கண்காணிப்பு குழுவினர்கள் கடந்த 15.03.2026 முதல் 25.03.2026 வரையிலான தொடர் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு, இந்திய தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளின் படி, உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு செல்லப்பட்ட ரொக்க பணம் ரூ.3,31,05,895, 62.91கோடி மதிப்பிலான விலை உயர்ந்த தங்கம் (ம) வைர ஆபரணங்கள் 44.759 கிலோவும், 1.40 இலட்சம் மதிப்பிலான 16.900 கிலோ கஞ்சா, 3387 மதிப்புடைய 28 மதுபானங்கள் மற்றும் இதர 3.10 இலட்சம் மதிப்பிலான இதர பரிசுப்பொருள்கள் கைப்பற்றப்பட்டது. ஆக மொத்தம் மதிப்பு ரூ.70,72,09,282 ஆகும்.

மேற்படி ஆவணங்கள் இல்லாமல் பறிமுதல் செய்யப்படும் பணம் மற்றும் பொருட்கள் சம்பந்தப்பட்ட கருவூலத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட உரிமையாளர்கள் பறிமுதல் செய்யப்பட்ட பணம் (ம) பொருள்களுக்குரிய ஆவணங்களுடன் மேல்முறையீடு செய்து திரும்ப பெறுவதற்கு ஏதுவாக மாவட்ட குறைதீர் குழு (District Grievance Committee) திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் 7373704202, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்குகள்), லட்சுமி 9443965474, திருவள்ளூர் மாவட்ட கருவூல அலுவலர் உஷா 9940025366 ஆகியோர் அடங்கிய குழு விசாரணையில், சம்பந்தப்பட்ட நபர் உரிய ஆவணங்களை சமர்ப்பிக்கும் பட்சத்தில், அவற்றை சரிபார்த்து, சரியாக இருப்பின், பறிமுதல் செய்யப்பட்ட பணம் (அ) பொருள்கள் விடுவிக்க உத்திரவிடப்படும் என திருவள்ளூர் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தெரிவித்துள்ளார்.

## கடும் நடவடிக்கை பாயும் காஸ் செலவுக்கு தனி கட்டணம் ஓட்டல்கள் வசூலிக்க கூடாது: நுகர்வோர் ஆணையம் எச்சரிக்கை

புதுடெல்லி: மேற்கு ஆசியா போரால், நாடு முழுவதும் வர்த்தக காஸ் சிலிண்டருக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், ஓட்டல்கள், உணவகங்கள் காஸ் செலவுக்கென தனியாக கட்டணம் வசூலிக்கின்றன. இது குறித்து மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தேசிய நுகர்வோர் உதவி மையத்தில் பெறப்பட்ட புகார்கள் மற்றும் ஊடக அறிக்கைகளின் அடிப்படையில், சில ஓட்டல்கள் மற்றும் உணவகங்கள் நுகர்வோருக்கு வழங்கும் பில்களில் 'எல்பிஜி கட்டணம்', 'எரிவாயு கூடுதல் கட்டணம்' மற்றும் 'எரிபொருள் செலவு மீட்பு' போன்ற கூடுதல் கட்டணங்கள் வசூலிப்பதை சிசிபிஏ தீவிரமாக கவனத்தில் கொண்டுள்ளது.

இது நியாயமற்ற வர்த்தக நடைமுறையாகும். எந்தவொரு ஓட்டலோ அல்லது உணவகமோ, பில்லில் காஸ் செலவுக்கு கூடுதல் கட்டணங்களை விதிக்கக் கூடாது. இதை மீறுவது நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கைக்கு உள்ளாகக் கூடும்.

இவ்வாறு எச்சரித்துள்ளது.

## சட்டமன்ற தேர்தலில் போட்டியிட ஏப்.6ம் தேதி வேட்புமனுவைத் தாக்கல் செய்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை: மார்ச்.27–

சட்டமன்ற தேர்தலில் போட்டியிட ஏப்.6ம் தேதி வேட்புமனுவைத் தாக்கல் செய்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். முதலமைச்சர் ஏப்ரல் 2ம் தேதி தேர்தல் பிரச்சாரத்தை திருவாரூரில் தொடங்குகிறார். ஏப்.21ம் தேதி கொளத்தூர் தொகுதியில் தனது பிரச்சாரத்தை முடிக்கிறார்.

ஏப்ரல் 3ம் தேதி காலை ஜெயங்கொண்டம் பொதுக்கூட்டம் நடத்துகிறார். திருவெறும்பூரில் மாலை பொதுக்கூட்டம் மற்றும் திருச்சி மாநகராட்சியில் ரோடு ஷோ நடத்துகிறார். ஏப்ரல் 4ம் தேதி காலை கரூரில் பொதுக்கூட்டம், மாலை திருப்பூரில் பொதுக்கூட்டம் நடத்துகிறார். ஏப்ரல் 5ம் தேதி காலை நாகர்கோவில் மாலை திருநெல்வேலியில் பொதுக்கூட்டம் நடத்துகிறார்.

ஏப்ரல் 6ம் தேதி காலை சட்டமன்ற தேர்தலில் போட்டியிட வேட்புமனுவை தாக்கல் செய்கிறார். மாலை திருவள்ளூரில் பொதுக் கூட்டத்தில் பங்கேற்கிறார். ஏப்ரல் 7ம் தேதி காலை மேட்டுப்பாளையத்தில் பொதுக்கூட்டமும் மாலை சூலூரில் பொதுக்கூட்டம் மற்றும் ரோடு ஷோ நடத்துகிறார்.

ஏப்ரல் 8ம் தேதி பரமத்தி வேலூர், ஈரோடு மாவட்டங்களில் பொதுக்கூட்டம் நடத்துகிறார். 9ம் தேதி தருமபுரி, கிருஷ்ணகிரியில் பொதுக்கூட்டம், 10ம் தேதி வேலூர் மற்றும் ஆரணி மாவட்டங்களில் பொதுக்கூட்டம் நடத்துகிறார். 11ம் தேதி சிவகங்கையில் பொதுக்கூட்டம் நடைபெறும். 21ம் தேதி ஸ்ரீ பெரும்புத்தூர் தொகுதியில் பொதுக்கூட்டம் மாலை கொளத்தூரில் பிரசாரத்தை நிறைவு செய்கிறார்.

# அன்னூர் ஒன்றியம் கணேஷ்புரம் பகுதியில் தெருமுனை பிரச்சார கூட்டம்!!



கோவை: மார்ச்27

கோவை மாவட்டம் அன்னூர் ஒன்றியம் கணேசபுரம் பகுதியில் அதிமுக அம்மா பேரவை சார்பில் "மக்களைத் தேடி மாற்றம் வேண்டி" தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் அன்னூர் தெற்கு ஒன்றிய செயலாளர் ஓ.எஸ்.சாய் செந்தில் தலைமையில் நடைபெற்றது.

இதில் சிறப்பு பேச்சாளராக அதிமுக செய்தி தொடர்பாளர் கல்யாணசுந்தரம் கலந்துகொண்டு அதிமுக ஆட்சியில் இருந்தபோது செய்த திட்டங்களை சாதனைகளாக எடுத்துக் கூறியும், வரும் சட்டமன்றத் தேர்தலில் திமுகவை வீழ்த்தி வெற்றிவாகை சூடுவோம் என பிரச்சார உரையாற்றினார். இந்நிகழ்வில் உடன் மாவட்ட அம்மா பேரவை செயலாளர் நாசர், மாநில வர்த்தக அணி துணை தலைவர் அம்பாள் பழனிச்சாமி, வடக்கு ஒன்றிய செயலாளர் சரவணன், மாவட்ட மாணவரணி செயலாளர் கோகுல் மற்றும் அதிமுக கட்சி நிர்வாகிகள் கூட்டணி கட்சியினர் திரளான பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

# திருத்தணி சட்டமன்ற தொகுதியின் பல்வேறு பகுதிகளில் சட்டமன்ற பொது தேர்தலை முன்னிட்டு 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

திருவள்ளூர் மார்ச் 27 : திருத்தணி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் சட்டமன்ற பொது தேர்தல்2026யை முன்னிட்டு 100 சதவிகித வாக்குப்பதிவை வலுயுறுத்தி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மு.பிரதாப் தலைமையில் நடைபெற்றது(ம)வாக்குச்சாவடி மையங்கள் பறக்கும் படை மற்றும் நிலை குழுக்கள் வாகனங்களை சோதனையிடும் பணிகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.



அதன்படி திருத்தணி வட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட டாக்டர் இராதா கிருஷ்ணன் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் "தேர்தல் திருவிழா தமிழ்நாட்டின் பெருவிழா" சட்டமன்ற பொது தேர்தல் 2026யை முன்னிட்டு 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி மாவட்ட தேர்தல் அலுவலர் தலைமையில் வாக்காளர் விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்து, செஃல்பி பூத்தில் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டு, பள்ளி மாணவ மாணவியர்கள், மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் பள்ளிக் கல்வித்துறை அலுவலர்களுக்கு உறுதிமொழி பத்திரங்களை (சங்கல்ப் பத்திர) வழங்கி விழிப்புணர்வை ஏற்படுத்தினார். பின் வாக்குச்சாவடி மையத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அடிப்படை வசதிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேலும் குமாரராஜீபேட்டை அரசு நடுநிலைப்பள்ளியில் சட்டமன்ற பொது தேர்தல் 2026யை முன்னிட்டு 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி மாவட்ட தேர்தல் அலுவலர் மு.பிரதாப் தலைமையில் நடைபெற்ற வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பள்ளி மாணவர்களுடன் கலந்துரையாடி, வாக்குச்சாவடி மையத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அடிப்படை வசதிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

நிறைவாக, சட்டமன்ற பொது தேர்தல் 2026யை முன்னிட்டு, திருத்தணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பொன்பாடி சோதனைச்சாவடி பகுதியில் மாவட்ட தேர்தல் அலுவலர் பறக்கும் படை மற்றும் நிலை குழுக்கள் வாகனங்களை சோதனையிடும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இதில் திருத்தணி சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரும் திருத்தணி வருவாய்கோட்டாட்சியருமான என்.எம்.கனிமொழி, உதவி தேர்தல் நடத்தும் அலுவலரும் திருத்தணி வட்டாட்சியருமான குமார் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# 25 ஆண்டு கனவுதரை பாலம் திறந்து வைத்த கவுன்சிலருக்கு பொதுமக்கள் பாராட்டு!!!



திருப்பூர் மார்ச் :27

பிச்சம் பாளையம். திருப்பூர் மாநகராட்சி 16 வது வார்டு பிச்சம்பாளையம் புதூர் நால்ரோடு சந்திப்பில் மழைக்காலங்களில் சுமார் இரண்டு அடி தண்ணீர் தேங்கி நிற்கும் இதனால் அங்கேரி பாளையம் ஸ்ரீநகர் மற்றும் பிச்சம்பாளையம் பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் வேலைக்கு செல்வது மற்றும் பள்ளிக்குச் செல்லும் மாணவர்கள் மழைக்காலங்களில் மிகுந்த அவதிப்பட்டு வந்தனர். கடந்த 3 மாதங்களுக்கு முன்பு 15 லட்சம் மதிப்பீட்டில்

மழைநீர் வடிகால் மற்றும் தரை பாலம் அமைக்கும் பணி நடைபெற்று வந்தது. இதனால் அவ்வழியாக போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டு மாற்று வழியில் பொதுமக்கள் சென்று வந்தனர் பணிகள் நிறைவடைந்த நிலையில் திறப்பு விழா காணாமல் அவ்வழிப்பாதை அடைக்கப்பட்டு இருந்த நிலையில் இன்று பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வந்தது அதனை 16 வது வார்டு மாமன்ற உறுப்பினர் தமிழ்ச்செல்வி கனகராஜ் முன் நின்று இரு சக்கரம் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் வழியாக செல்ல ஏதுவாக பணிகளை மேற்கொண்டார் இதனால் பிச்சம் பாளையம் ஸ்ரீ நகர் அங்கேரிபாளையம் செல்லும் பாதையான நால் ரோட்டில் தரைப்பாலம் கட்டி பயன்பாட்டுக்கு வந்ததை பொதுமக்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்ததாக தெரிவித்தனர் .

மேலும் கடந்த 25 ஆண்டு காலமாக மழைக்காலங்களில் தங்கள் பட்டு வந்த இன்னல்களில் இருந்து விடுபட்டதாகவும் தெரிவித்தனர்...

# விழுப்புரம் இ.எஸ் கல்வியில் கல்லூரியில் மறைக்கப்பட்ட திறமைகளை வெளிக்கொணர்தல் விழா

விழுப்புரம் மார்ச் 27

விழுப்புரம் இ.எஸ் கல்வி குழுமத்தின் ஓர் அங்கமான இ எஸ் கல்வியியல் கல்லூரியில் நேற்று காலை 10 மணியளவில் இ எஸ்கல்வி குழுமத்தின் தலைவர் .செல்வமணி தலைமையில் மறைக்கப்பட்ட திறமைகளை வெளிக்கொணர்தல் விழா (Concealed Talent Fair Programme) நடைபெற்றது. இவ்விழாவில் இ.எஸ் கல்வியியல் கல்லூரி முதல்வர் முனைவர் தே.செந்தில் முருகன் வரவேற்புரையாற்றினார், இவ்விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக விழுப்புரம், டாக்டர் எம்.ஜி.ஆர்அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர். B.தாமரை கண்ணன் அவர்களும், விழுப்புரம், மாவட்டத் திட்ட மேலாளர் முனைவர் சீனுவாசன் , சுவாமி விவேகனந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் கெஜலட்சுமி இணைப்பேராசிரியர் முனைவர். ஆதி நாராயணன் சென்னை மாநில கல்லூரி இணைப்பேராசிரியர் முனைவர் பாலாஜி விழுப்புரம், வணிக இணை மேலாளர் சரவணதாசன் , மதிப்புறு விரிவுரையாளர் முனைவர் எம்.ஜி.ஆர் சச்சிதானந்தம் மதிப்புறு விரிவுரையாளர் முனைவர் ரி. மணிவர்மன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர், இதில் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி விழுப்புரம், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவெண்ணெய்நல்லூர், தெய்வாணை அம்மாள் மகளிர் கல்லூரி, சுவாமி விவேகனந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒரத்தூர், டாக்டர் எம்.ஜி.ஆர் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, விழுப்புரம். இக்கல்லூரியில் பயிலும் சுமார் 500க்கு மேற்பட்ட மாணவ, மாணவிகள் (பாடல், நடனம், ஒரு வார்த்தை பல அர்த்தம், வார்த்தை தேடல், காய்கறிச் செதுக்கல், மெஹந்தி, இணைப்பு விளையாட்டு, பிழைத் திருத்தம், இசைக்கருவி, நினைவாற்றல் சோதனை, நாக்கு முறுக்கு, முகக் கலை ஓவியம், காகிதம் கைவினை செய்தல், கனசதுர புதிர் தீர்க்கும், போன்ற போட்டியில் கலந்து கொண்டு திறமைகளை வெளி காட்டினார்கள். இதை தொடர்ந்து 3 மணியளவில் விழுப்புரம், அறிஞர் அண்ணா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி இணைப் பேராசிரியர் முனைவர் ரங்கநாதன் இ.எஸ் கல்வியியல் கல்லூரி முன்னால் மாணவ சங்கத்தின் செயலாளர் கணபதி கலந்துகொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றுதழ் மற்றும் பரிசுகளும் வழங்கி பாராட்டினர். இதில் இ.எஸ் கல்வியியல் கல்லூரி துணை பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# அரசுப் பள்ளித் தலைமை ஆசிரியை கிருஷ்ணவேணி சஸ்பெண்ட்

தஞ்சை: மார்ச்.27–

தஞ்சாவூர் ஒரத்தநாட்டில் நடந்த த.வெ.க. மகளிர் தின விழா மேடையில் சினிமா பாடலுக்கு நடனமாடிய சங்கரநாதர்குடிக்காடு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியை சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளார்.

அரசு ஊழியராக இருந்து அரசியல் கட்சி மேடையில் நடனமாடி பணித்தன்மைக்கு பங்கம் விளைவித்ததாகக் கூறி பள்ளி கல்வித்துறை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

# திருவள்ளூர் மாவட்டத்தில் மகாவீர் ஜெயந்தி, திருவள்ளுவர் தினம் மற்றும் வடலூர் இராமலிங்கனார் நினைவு நாள் ஆகிய தினங்களில் அனைத்து இறைச்சி கூடங்கள் மூட வேண்டும் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் உத்தரவு

திருவள்ளூர் மார்ச் 27 :

தமிழ் நாட்டில் மகாவீர் ஜெயந்தி, திருவள்ளுவர் தினம் மற்றும் வடலூர் இராமலிங்கனார் நினைவு நாள் ஆகிய தினங்களில் தமிழகத்தில் உள்ள அனைத்து இறைச்சி கூடங்களை மூடி வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. இந்நிலையில், வருகின்ற 31.03.2025, செவ்வாய்கிழமை அன்று நாடு முழுவதும் மகாவீர் ஜெயந்தி தினம் கடைபிடிக்கப்பட உள்ளது.

எனவே, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து இறைச்சி கூடங்களான அடி தொட்டி, இறைச்சி வெட்டும் இடம் மற்றும் இறைச்சிகளை விற்பனை செய்யும் அனைத்து கடைகளும் மேற்படியான தினத்தில் கட்டாயம் மூடப்பட வேண்டும் .

மேலும் அரசு விதி முறைகளுக்கு எதிராக மகாவீர் ஜெயந்தி தினத்தன்று (31.03.2025) செயல்படும் அனைத்து இறைச்சி கூடம் மற்றும் கடைகளின் உரிமையாளர்கள், விற்பனையாளர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ள சம்பந்தப்பட்ட உள்ளாட்சி துறைகளுக்கு (ஆணையர், ஆவடி மாநகராட்சி, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து நகராட்சி ஆணையர்கள், அனைத்து செயல் அலுவலர்கள் மற்றும் அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு) உத்தரவிடப்பட்டுள்ளது என திருவள்ளூர் மாவட்ட நிர்வாகத்தின் வாயிலாக மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தெரிவித்துள்ளார்.

# கிருஷ்ணகிரி அருகே பள்ளி வளாகத்தில் உள்ள மேல் நிலை குடிநீர் நீர்த்தேக்க தொட்டி இடிந்து விழும் அபாயம்!

கிருஷ்ணகிரி மாவட்டம், காட்டாகரம் ஊராட்சிக்குட்பட்ட சந்தூர் தொடக்கப்பள்ளி வளாகத்தில் மிகப்பெரிய அளவிலான மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைந்துள்ளது. இந்தத் தொட்டியின் மூலம் அப்பகுதி மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.







தற்போது இந்த நீர்த் தேக்கத் தொட்டியின் அடிப்பகுதியில் உள்ள தாங்கு தூண்கள் பலத்த சேதமடைந்து காணப்படுகின்றன. தூண்களில் உள்ள சிமெண்ட் பூச்சுகள் உதிர்ந்து, உள்ளே இருக்கும் இரும்பு கம்பிகள் துருப்பிடித்த நிலையில் வெளியே தெரிகின்றன. இதனால் தூண்களின் உறுதித்தன்மை கேள்விக்குறியாகியுள்ளது.

பள்ளி வளாகத்திலேயே இந்தத் தொட்டி அமைந்துள்ளதால், நாள்தோறும் நூற்றுக்கணக்கான மாணவ, மாணவிகள் இதன் அருகிலேயே நடமாடி வருகின்றனர். தொட்டி பலவீனமாக இருப்பதால், எப்போது வேண்டுமானாலும் அசம்பாவிதம் ஏற்படக் கூடும் என்ற அச்சத்தில் மாணவர்களும், ஆசிரியர்களும், பொது மக்களும் உள்ளனர்.

இது குறித்து சமூக ஆர்வலர்கள் கூறுகையில், "மிகப்பெரிய கொள்ளளவு கொண்ட இந்த நீர்த்தேக்கத் தொட்டியின் தூண்கள் சிதிலமடைந்து வருவது பெரும் ஆபத்தின் அறிகுறியாகும். பெரிய அசம்பாவிதம் ஏதேனும் ஏற்படும் முன், மாவட்ட நிர்வாகமும், சம்பந்தப்பட்ட ஊராட்சி அதிகாரிகளும் உடனடியாக தலையிட வேண்டும். சேதமடைந்த தூண்களை நவீன கான்கிரீட் கலவை கொண்டு பலப்படுத்தவும், தொட்டியின் நிலைத்தன்மையை ஆய்வு செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்," என கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் பள்ளி குழந்தைகளின் நலன் கருதி, அதிகாரிகள் போர்க்கால அடிப்படையில் சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

# கோவை மாவட்டத்தில் 2 கிலோ 400 கிராம் கஞ்சா பறிமுதல்!!



கோவை :மார்ச்27

சமூகத்தின் நச்சாக விளங்கும் போதைப் பொருட்களின் பயன்பாட்டை முற்றிலும் ஒழித்து, போதைப் பொருள் இல்லாத கோவையை உருவாக்கும் பொருட்டு கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கே. கார்த்திகேயன் முனைப்புடன் செயல்பட்டு வருகிறார். அதன் அடிப்படையில் பேரூர் காவல் நிலைய காவல்துறையினர்

குற்ற சம்பவம் நடக்காமல் கண்காணிக்க வேண்டி ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது, கஞ்சா விற்பனைக்கு வைத்திருப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் காவல்துறையினர் ராமசெட்டிபாளையம் அருகில் சென்று சோதனை மேற்கொண்டபோது கஞ்சாவை விற்பனைக்காக வைத்திருந்த செல்வபுரம் பகுதியைச் சேர்ந்த குணசேகரன் மகன் சரவணன் (24),பேரூர் பகுதியைச் சேர்ந்த சீனிவாசன் மகன் விக்னேஷ் (22) மற்றும் மணிகண்டன் மகன் ஹரி ராகவேந்திரன் ஆகியோர்களை கைது செய்து அவர்களிடமிருந்து சுமார் 2 கிலோ 400 கிராம் கஞ்சா மற்றும் இரண்டு சக்கர வாகனம் 1 ஆகியவற்றை பறிமுதல் செய்து மேற்படி நபர்களை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர்.

இதுபோன்று போதைப் பொருட்கள் விற்பனையில் ஈடுபட்டாலோ அல்லது சட்ட ஒழுங்கிற்கு எதிராக செயல்பட்டாலோ, ஈடுபட்டவர்கள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என காவல் கண்காணிப்பாளர் எச்சரித்துள்ளார்.

# திருச்செந்தூர் அருகே ரூ. 4.40 லட்சம் பறிமுதல்




திருச்செந்தூர்: திருச்செந்தூர் முருகன் கோயிலுக்கு சுவாமி தரிசனம் செய்ய வந்த ராமநாதபுரம் சமஸ்தான ராணியிடமிருந்து ரூ. 4.40/ லட்சத்தை தேர்தல் கண்காணிப்பு குழுவினர் பறிமுதல் செய்து திருச்செந்தூர் ஆர்டிஓவிடம் ஒப்படைத்தனர்.

# புதுச்சேரி மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாக்க 10 அம்ச கோரிக்கைகள்: மனித உரிமைகள் இயக்கம் தேர்தல் அறிக்கை வெளியீடு



புதுச்சேரி: மார்ச்.27–

புதுச்சேரி 'மனித உரிமைகள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இயக்கம்' (HRCPS) சார்பில், 2026ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு 10 முக்கிய கோரிக்கைகள் அடங்கிய தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இயக்கத்தின் பொதுச் செயலாளர் முருகன் ஆனந்தன் விடுத்துள்ள இந்த அறிக்கையில், மாநிலத்தின் சட்டம்ஒழுங்கு, சுகாதாரம் மற்றும் கல்விச் சூழலை மேம்படுத்தப் பல்வேறு பரிந்துரைகள் முன்வைக்கப் பட்டுள்ளன.

அறிக்கையின் முக்கிய அம்சங்கள்:

பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு: மாநிலத்தில் அதிகரித்து வரும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்க நிளிசிஷிளி சட்டம் மற்றும் குடும்ப வன்முறை தடுப்புச் சட்டங்களை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

காவல்துறை சீர்திருத்தம்: காவல் நிலையங்கள் மக்கள் எளிதில் அணுகக்கூடிய வகையில் இருக்க வேண்டும். வெளிமாநில அதிகாரிகளுக்குத் தமிழ் மொழி தெரியாததால் ஏற்படும் தகவல் தொடர்பு சிக்கல்களைத் தவிர்க்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், லாக் அப் சித்திரவதைகளைத் தடுக்க அனைத்து நிலையங்களிலும் CCTV கேமராக்கள் பொருத்துவதை உறுதி செய்ய வேண்டும்.

ஆணையங்கள் அமைத்தல்: மத்திய அரசின் சட்டப்படி புதுச்சேரிக்கு எனத் தனியாக மாநில மனித உரிமை ஆணையம்,சிறுபான்மையினர் ஆணையம், குழந்தைகள் பாதுகாப்பு ஆணையம் மற்றும் ஆதிதிராவிடர் ஆணையங்களை உடனடியாக உருவாக்க வேண்டும்.

சுகாதாரச் சீர்கேடுகள்: நெநெல்லித்தோப்பு, முத்தியால்பேட்டை போன்ற பகுதிகளில் குடிநீரில் கழிவுநீர் கலப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. 2025 இல் இதனால் ஏற்பட்ட பாதிப்புகளைச் சுட்டிக்காட்டி, தூய்மையான குடிநீர் வழங்கவும், அரசு மருத்துவமனைகளில் நிலவும் மருந்து மற்றும் மருத்துவர்கள் பற்றாக்குறையைப் போக்கவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கல்வி மற்றும் ரேஷன் கடைகள்: மத்திய அரசின் புதிய கல்விக் கொள்கையால் மாணவர்களுக்கு ஏற்படும் நெருக்கடியைத் தவிர்க்க, மாநிலத்திற்கெனத் தனி கல்வித் திட்டத்தைக் கொண்டு வர வேண்டும். பல ஆண்டுகளாக முடங்கிக் கிடக்கும் ரேஷன் கடைகளைத் திறந்து அனைத்துப் பொருட்களையும் வழங்க வேண்டும்.

நுகர்வோர் உரிமைகள்: நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின்படி, அரசு ஆலோசனைக் குழுக்களில் நுகர்வோர் அமைப்புகளின் பிரதிநிதிகளை நியமிக்க வேண்டும். உணவுப் பாதுகாப்பு (FSSAI) மற்றும் சாலைப் பாதுகாப்பு குழுக்களில் பொதுமக்களின் பங்களிப்பை உறுதி செய்ய வேண்டும்.

புதுச்சேரி மக்களின் வாழ்வாதாரத்தையும், பாதுகாப்பையும் உறுதி செய்ய அரசியல் கட்சிகள் இந்த அம்சங்களைத் தங்கள் தேர்தல் வாக்குறுதிகளில் சேர்க்க வேண்டும் என இவ்வியக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.





புதுச்சேரி உப்பளம் தொகுதியில் தேசிய ஜனநாயக கூட்டணியில் அதிமுக சார்பில் போட்டியிடும் வேட்பாளரான அதிமுக மாநில செயலாளர் அன்பழகன் அவர்கள் வம்பாகீரப்பாளையம் அங்காளம்மன் கோவிலில் சாமி தரிசனம் செய்து விட்டு தனது பிரச்சாரத்தை நேற்று மாலை தொடங்கினார். தொடர்ந்து அவர் அங்காளம்மன் கோவில் கிழக்கு பகுதியில் வீடு வீடாக சென்று வாக்காளர்களிடம் துண்டு பிரசுரங்களை வழங்கி இரட்டை இலை சின்னத்திற்கு வாக்களிக்க கோரி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். பிரச்சாரத்தின் போது மாநில கழக துணைச் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, மாநில மீனவர் அணி செயலாளர் ஞானவேல், மாநில மீனவர் அணி இணைச் செயலாளர் பக்கிரி என்ற ராமச்சந்திரன்,மாநில மீனவர் அணி துணைச் செயலாளர்கள் பாவா என்ற சந்திரசேகரன், காலப்பன்,வளர் (எ) முனியன்,கார்த்தி. புதுச்சேரி நகர கழக இணைச் செயலாளர் ராஜசேகர். மாநில எம்ஜிஆர் மன்ற பொருளாளர் வேல்முருகன், வார்டு செயலாளர் செல்வம், சக்திவேல். பார்த்திபன், பன்னீர். முத்து, சங்கர்.சக்திவேல், வேலவன், ராமு, வெள்ளையன். பாஜகவை சேர்ந்த தெய்வநாயகம், மாரியப்பன் சக்திவேல், முத்து, பிரவீன்,ராஜு , அற்பதழகன், சாமிநாதன், கரிகாலன். வீரராகு ஆகியோர் உடனிருந்தனர்.

# புதுச்சேரியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு மனிதநேய மக்கள் கட்சி ஆதரவு: மாவட்ட செயலாளர் குதுரத்துல்லா தகவல்

புதுச்சேரி: மார்ச். 27

புதுச்சேரி மாநிலத்தில் நடைபெறவுள்ள தேர்தலில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளர்களுக்கு மனிதநேய மக்கள் கட்சி (மமக) தனது முழுமையான ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இது குறித்து அக்கட்சியின் புதுச்சேரி மாவட்ட செயலாளர் குதுரத்துல்லா விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

மதவாத சக்தியான பாஜகவை வீழ்த்த வேண்டியது காலத்தின் கட்டாயம். புதுச்சேரியில் காங்கிரஸ் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு



கூட்டணி வேட்பாளர்கள் மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவார்கள். இந்த வெற்றிக்காக மனிதநேய மக்கள் கட்சி தீவிரமாகப் பணியாற்றும். இந்தத் தேர்தல் மற்றும் அரசியல் களத்தில் இஸ்லாமியர்களுக்கான உரிய பிரதிநிதித்துவத்தை கூட்டணி தலைமை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைப்பதாக அவர் தெரிவித்தார். தேர்தல் பணிகள் குறித்து ஆலோசிப்பதற்காக தேர்தல் பணிக்குழு தலைவர் மற்றும் மாநில அமைப்பு செயலாளர் மாயவரம் ஜெ.அமீன் தலைமையில் முக்கிய நிர்வாகிகள் சந்திப்பு நடைபெற்றது. இதில் மாநில செயலாளர்கள் முஸ்தாக்தீன், தைக்கால் முபாரக் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சஹாபுதீன் (புதுச்சேரி மாவட்ட தலைவர்) ராஜ் முஹம்மது, குதுரத்துல்லா (மாவட்ட செயலாளர்கள்) ஷேக் தாவூத் (மாவட்ட பொருளாளர்) சர்புதீன் (காரைக்கால் மாவட்ட செயலாளர்) அஷ்ரப் அலி (மாவட்ட துணை செயலாளர்) அபிப்ரஹ்மான் (முன்னாள் மாவட்ட பொருளாளர்) கமால் சாதிக் (ஷிவிமி மாவட்ட செயலாளர்) மற்றும் கட்சி நிர்வாகிகள் பலரும் இந்த நிகழ்வின் போது உடனிருந்து தங்களது ஆதரவை உறுதிப்படுத்தினர்.



எதிர்வரும் 23–4–2026 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி ஈரோடு மாவட்டம், அந்தியூர் பேருந்து நிலையத்தில் இசைக்கேற்ப நடனமாடும் குதிரை கொண்டு நிகழ்ச்சி பொதுமக்களிடம் தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்திய நிகழ்ச்சியில் பங்கேற்ற போது எடுத்த படம்.

# புதுச்சேரி பாஜக மாநில ஊடக மையம் திறப்பு



பாரதிய ஜனதா கட்சி சார்பாக அமைக்கப்பட்ட மாநில ஊடக மையம் நேற்று திறந்து வைக்கப்பட்டது. இந்த ஊடக மையத்தை மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், புதுச்சேரி பாஜக மாநிலத் தலைவர் வி.பி. ராமலிங்கம் அவர்கள் முன்னிலை வகித்தார்.

சிறப்பு அழைப்பாளர்களாக உள்துறை அமைச்சர் நமச்சிவாயம், சட்டப்பேரவை தலைவர் ஏம்பலம் செல்வம், மாநில பொதுச் செயலாளர் லட்சுமி நாராயணன், மாநில தலைமை செய்தி தொடர்பாளர் அருள் முருகன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மேலும், மாநில ஊடகத்துறை தலைவர் நாகேஸ்வரன் அவர்கள் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்து தலைமை வகித்தார்.

இந்த நிகழ்வில் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.

# தலைவி A.R.நிஷா அறிவிப்பு! மகிலா காங்கிரஸ் நிர்வாகிகள் அதிரடி நீக்கம்!

அனைவருக்கும் வணக்கம்:கட்சியின் மாண்புக்கும் இறையாண்மைக்கும் பங்கம் விளைவித்து கட்சியினுடைய நியதியை தவறிய கீழ்க்கண்ட இவர்களை புதுச்சேரி மாநில மகளிர் காங்கிரஸின் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்தும்

புதுச்சேரி மாநில மகளிர் காங்கிரஸிலிருந்தும் மேலும் துணைத் தலைவியாக பதவி வகித்த பேபி பிரேம்குமாரி(lawspet ), துணைத்தலைவியாக பதவி வகித்த அம்சா(muttaiyalpet), துணைத்தலைவியாக பதவி வகித்த சரசு அன்பழகன்(ariyankuppam), பொதுச்செயலாளராக பதவி வகித்த ஜெயா பன்னீர்(manaveli), பொதுச்செயலாளராக பதவி வகித்த மகேஸ்வரி(ariyankuppam), பொதுச் செயலாளராக பதவி வகித்த ஏம்பலம் புஷ்பா,பொதுச் செயலாளராக பதவி வகித்த அஞ்சலை (ariyankuppam), தொகுதி தலைவியாக அரியாங்குப்பத்தில் பதவி வகித்த கவிதா போன்றவர் களை ஆகியோர்களை கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்குகிறேன்வீ

மேலும் கட்சியில் பயணிக்கும் மற்ற உறுப்பினர்களும் நிர்வாகிகளும் இவர்களுடன் எந்தவித தொடர்பும் வைத்துக் கட்சியின் மாண்புக்கும் இறையாண்மைக்கும் பங்கம் விளைவித்து கட்சியினுடைய நியதியை தவறிய கீழ்க்கண்ட இவர்களை புதுச்சேரி மாநில மகளிர் காங்கிரஸின் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்தும் கூடாது என்று அறிவுறுத்தப்படுகிறார்கள்

# சட்டமன்ற தேர்தல்2026 நடைபெறுவதையொட்டி மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாவட்டபகுதியில் தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினார்கள்!!





திருப்பூர் மார்ச்: 27

திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம்.. இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 திருப்பூர் மாவட்டத்திற்குட்பட்ட 101 தாராபுரம் (தனி), 102 காங்கேயம், 112 அவிநாசி தனி), 113 திருப்பூர் (வடக்கு), 114 திருப்பூர் (தெற்கு), 115 பல்லடம், 125 உடுமலைப்பேட்டை, 126 மடத்துக்குளம் ஆகிய 8 சட்டமன்ற தொகுதி களுக்கு நடைபெறவுள்ளதையொட்டி மாவட்டம் முழுவதும் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நாள்தோறும் நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் இன்றைய தினம், மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் மனிஷ் நாரணவரே மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாவட்டபகுதியில் தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கலந்துரையாடி துண்டு பிரசுரங்களை வழங்கினார்கள்.

தொடர்ந்து, மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் மனிஷ் மடத்துக்குளம் சட்டமன்றதொகுதிக்குட்பட்ட ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் அமைக்கப்படவுள்ள வாக்குப்பதிவு மையத்தில் தேவையான குடிநீர்வசதி, கழிப்பிட வசதி, மாற்றுத்திறனாளிகள் சாய்தளவழி, வாக்காளர்கள் வாக்களிக்க தேவையான வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

# 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி விழிப்புணர்வு கையெழுத்து இயக்கம் மற்றும் உறுதிமொழி ஏற்பு



வந்தவாசி, மார்ச் 27:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தேரடி பகுதியில் வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மையம் இணைந்து வரும் சட்டமன்றத் தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி விழிப்புணர்வு கையெழுத்து இயக்கம் மற்றும் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியை நடத்தினர். இந்த நிகழ்விற்கு உதவி தேர்தல் நடத்தும் அலுவலரும், வட்டாட்சியருமான பா.ஜெயவேல் தலைமை தாங்கி 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி பதாகையில் கையொப்பமிட்டும், உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியையும் தொடங்கி வைத்தார். இந்த நிகழ்விற்கு தேர்தல் துணை வட்டாட்சியர் சோமசுந்தரம், வருவாய் அலுவலர் லோகேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா. சீனிவாசன் வரவேற்றார். மேலும் இந்த நிகழ்ச்சியில் வந்தை வட்ட கோட்டை தமிழ்ச்சங்க தலைவர் பீ.ரகமத்துல்லா , எக்ஸ்னோரா கிளைத் தலைவர் சு.தனசேகரன், சமூக ஆர்வலர்கள் மலர் சாதிக், வந்தை பிரேம், எ.தேவா கவிஞர் முகமது அப்துல்லா, புலவர் ஏழுமலை, கேப்டன் பிரபாகரன், ஆசிரியர்கள் க.பூபாலன், மஹாவீர் உள்ளிட்டோர் பங்கேற்று, பதாகையில் கையொப்பமிட்டனர். மேலும் இந்த நிகழ்வில் ஏராளமான வாக்காளர்கள் கையொப்பமிட்டு 100% வாக்களிப்போம் என்ற உறுதிமொழியை ஏற்றனர். இறுதியில் கிராம நிர்வாக அலுவலர் எம்.பி.அர்ஜுனன் நன்றி கூறினார்.

# திருவள்ளூர் சட்டமன்ற தொகுதியின் பல்வேறு பகுதிகளில் சட்டமன்ற பொது தேர்தலை முன்னிட்டு 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

திருவள்ளூர் மார்ச் 27 :

திருவள்ளூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் சட்டமன்ற பொது தேர்தலை முன்னிட்டு 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மு. பிரதாப் தலைமையில் நடைபெற்றது அதன்படி எரிவாயு விநியோகிக்கும் வாகனங்கள் மற்றும் உருளைகளில் (கேஸ் சிலிண்டர்) மாவட்ட தேர்தல் அலுவலர் தேர்தல் விழிப்புணர்வு ஒட்டு வில்லைகள் ஒட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.



மேலும் இந்தியன் வங்கியில் 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி மாவட்ட தேர்தல் அலுவலர் தலைமையில் வாக்காளர் விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்து, வாக்காளர் விழிப்புணர்வு உறுதி மொழியினை அனைவரும் ஏற்றுக் கொண்டனர். பின், இந்தியன் வங்கி ஏடிஎம் மையத்தில் வாக்காளர் விழிப் புணர்வு ஒட்டு வில்லைகள் ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். அதனைத் தொடர்ந்து சட்டமன்ற பொது தேர்தல்2026 யை முன்னிட்டு மாவட்ட தேர்தல் அலுவலர் பறக்கும் படை மற்றும் நிலை குழுக்கள் வாகனங்களை சோதனையிடும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பேசினார்.

திருவள்ளூர் மாவட்டத்தில் இதுவரை ஒரு 18,000க்கும் அதிகமான சுவர் விளம்பரங்கள், பொது இடங்களில் இருக்கும் அரசியல் சார்ந்த பதாகைகள், விளம்பரங்கள் அனைத்தும் அகற்றும் பணி நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. திருவள்ளூர் மாவட்டத்தில் இதுவரைக்கும் ரூ.3 கோடிக்கு அதிகமாக பணம் கைப்பற்றப்பட்டுள்ளது. சோதனை சாவடிகள் மிக தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது அதன்படி திருத்தணி சட்டமன்ற தொகுதியில் ரூ.18 லட்சம் மற்றும் ஒன்றரை கிலோ கஞ்சா இதுவரைக்கும் கைப்பற்றப்பட்டுள்ளது. மாவட்டத்தில் 260 பதற்றமான வாக்குச்சாவடிகள் அறிவிக்கப்பட்டு இருக்கிறது. இடர்பாடுகள் உள்ள பதற்றமான தரமான வாக்குச்சாவடிகளில் துணை ராணுவப்படை பணியமர்த்தப்பட்டுள்ளனர் என்று கூறினார்.

இதில் மாவட்ட வழங்கல் அலுவலர் வெங்கடேசன், உதவி இயக்குநர் (பயிற்சி) பி.மோகன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் தென்னரசு, இந்தியன் வங்கி மேலாளர், பணியாளர்கள், வங்கி வாடிக்கையாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர் கள் கலந்து கொண்டனர்.




விழுப்புரம் மாவட்ட பெருந்திட்ட வளாக மைதானத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்டம் சார்பில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 முன்னிட்டு 100 சதவீதம் வாக்குப்பதிவு ஏற்படுத்தும் விதமாக மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ஷேக் அப்துல் ரஹ்மான், தலைமையில் அங்கன்வாடி பணியாள்கள் மூலம் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. உடன் உதவி ஆட்சியர் வெங்கடேஷ்வரன், இணை இயக்குனர் \ திட்ட இயக்குனர் (மகளிர் திட்டம்) செந்தில் வடிவு, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்சசி பணிகள் திட்ட அலுவலர் பழனி உட்பட பலர் உள்ளனர்.

# தொண்டாமுத்தூரில் 4வது முறையாக களமிறங்கும் எஸ்.பி.வேலுமணி

கோவை: மார்ச்.27–

அதிமுக சார்பில் தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடும் முதல் கட்ட வேட்பாளர்கள் பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது. அதில், தொண்டாமுத்தூர் தொகுதியில் முன்னாள் அமைச்சரும், கோவை புறநகர் தெற்கு மாவட்ட செயலாளரும், தலைமை நிலைய செயலாளருமான எஸ்.பி.வேலுமணி எம்.எல்.ஏ. போட்டியிடுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2006 11 காலகட்டத்தில் பேரூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற எஸ்.பி.வேலுமணி, கடந்த 2011ல் தொண்டாமுத்தூர் தொகுதியில் முதல் முறையாக போட்டியிட்டார். 2016ல் இரண்டாவது முறையாகவும், 2021ல் 3வது முறையாகவும் இத்தொகுதியில் போட்டியிட்டு வென்ற அவர், நடப்புத் தேர்தலில் 4வது முறையாக போட்டியிடுகிறார்.

குனியமுத்தூர் சுகுணாபுரத்தைச் சேர்ந்த எஸ்.பி.வேலுமணி, இளமைக்காலம் முதலே அதிமுகவில் உறுப்பினராக இருந்து பணியாற்றி வருகிறார். 2001ம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட்டு குனியமுத்தூர் நகராட்சி தலைவர் ஆனார்.

2006ம் ஆண்டு முதல்முறையாக பேரூர் சட்டப்பேரவைத் தொகுதியில்போட்டியிட்டு தன்னை எதிர்த்து போட்டியிட்ட வேட்பாளரை விட 14,235 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

இந்த காலகட்டத்தில் திமுக ஆளும் கட்சியாக இருந்ததால்,திமுக அரசுக்கு எதிராக மறைந்த அதிமுக பொதுச்செயலாளர் ஜெயலலிதா அறிவித்த அத்தனை போராட்டங்களையும் முன்னின்று எஸ்.பி.வேலுமணி நடத்தினார்.

பின்னர், 2011, 2016 தேர்தல்களில் தொண்டாமுத்தூர் தொகுதியில்போட்டியிட்டு வென்ற எஸ்.பி.வேலுமணி அமைச்சராக பணியாற்றியுள்ளார்.சிறப்பு திட்ட செயலாக்கத் துறை, தொழில்துறை, வருவாய்த் துறை, சட்டத்துறை, உள்ளாட்சித்துறை ஆகிய துறைகளின் அமைச்சராக பணியாற்றியுள்ளார்.

அதிமுகவில் தற்போதைய நிலையில் தவிர்க்க முடியாத தலைவராக உள்ள எஸ்.பி.வேலுமணி,கோவை உள்ளிட்டமாவட்டங்களை உள்ளடக்கிய கொங்கு மண்டலத்தின் பொறுப்பாளராக வும் உள்ளார். எஸ்.பி.வேலுமணி

# திருப்போரூர் தொகுதிக்கு வந்த 1363 இயந்திரங்கள்: அனைத்து கட்சி முன்னிலையில் சீல் வைப்பு

திருப்போரூர்: மார்ச்.27–

திருப்போரூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள வாக்குச்சாவடி மையங்களுக்கு அனுப்புவதற்காக மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் நேற்று காலை திருப்போரூர் தொகுதி தேர்தல் அலுவலகத்திற்கு துப்பாக்கி ஏந்திய துணை ராணுவ படை பாதுகாப்புடன் வந்திறங்கின. திருப்போரூர் தொகுதி தேர்தல் அலுவலர் விஜயகுமாரி, திருப்போரூர் வட்டாட்சியர் ஆறுமுகம் ஆகியோர் முன்னிலையில் இயந்திரங்கள் கொண்டு வரப்பட்ட லாரியின் பின்புற கதவில் வைக்கப்பட்டிருந்த சீல் உடைக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து ஏற்கனவே தயார் செய்து வைக்கப்பட்ட பாதுகாப்பு அறையில் இந்த இயந்திரங்கள் வைக்கப்பட்டன. திருப் போரூர் சட்டமன்ற தொகுதிக்கு மட்டும் 442 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், 442 கட்டுப்பாட்டு கருவிகள், 479 சரிபார்க்கும் (விவி பேட்) கருவிகள் என 1363 இயந்திரங்கள் வந்துள்ளன. இந்த இயந்திரங்கள் திருப்போரூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள 369 வாக்குச்சாவடி மையங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட வரிசை எண்ணின்படி அடுக்கி வைக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து இயந்திரங்கள் வைக்கப்பட்ட அறை அனைத்துக்கட்சியினர் முன்னிலையில் சீல் வைக்கப்பட்டது. அறையின் முன்பு துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

# சேலத்தில் கர்ப்பிணிப் பெண்களுக்குச் சட்டவிரோதமாக ஸ்கேன் காவல்துறையிடம் சிக்கிய பெண்கள்.

சேலம் மார்ச். 27

சேலம் மாவட்டம் கெங்கவல்லி சுற்றுவட்டாரப் பகுதிகளில் கருவில் உள்ள குழந்தைகளின் பாலினத்தைக் கண்டறியும் சோதனை பரவலாக நடைபெற்று வருவதாக கெங்கவல்லி அரசு மருத்துவமனை தலைமை மருத்துவருக்குத் தகவல் கிடைத்துள்ளது.



உடனடியாக இது குறித்து காவல்துறைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, மருத்துவர் நித்தியா உட்பட நான்கு பேர் கொண்ட மருத்துவக் குழு காவல்துறையினருடன் நடுவலூர் புற்று மாரியம்மன் பகுதியில் சோதனை நடத்தினர். இதில், ஜெயசூர்யா என்பவரது வீட்டில் ஸ்கேன் செய்யும் இயந்திரம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, அங்கிருந்த இரண்டு பெண்களிடம் காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டனர். அப்போது, குணவதி, அம்சவேணி ஆகிய இவர்கள் கோவிந்தம்பாளையம் பகுதியைச் சேர்ந்த ஒரு கர்ப்பிணியையும், விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணை நல்லூரைச் சேர்ந்த ஒரு கர்ப்பிணியையும் கருவில் உள்ள குழந்தையின் பாலினத்தைக் கண்டறிய, சோதனை செய்ய அழைத்து வந்திருந்தது தெரியவந்தது. இதையடுத்து,காவல்துறையினர் அந்த ஸ்கேன் இயந்திரத்தைப் பறிமுதல் செய்ததோடு, அவர்களையும் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர்.

இது குறித்து மருத்துவர் நித்தியா அளித்த புகாரைத் தொடர்ந்து, செவிலியர் அம்சவேணி, புரோக்கராக செயல்பட்ட குணவதி மற்றும் வீட்டை வாடகைக்கு விட்ட ஜெயசூர்யா ஆகிய மூவர் மீது வழக்குப் பதிவு செய்ததுடன், அம்மூவரையும் காவல்துறையினர் கைது செய்தனர். தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணையில், ஆத்தூரில் உள்ள ஒரு கிளினிக்கில் செவிலியராக பணியாற்றி வந்த குணவதி, அம்சவேணி ஆகிய இருவரும் ஸ்கேன் செய்வது குறித்துத் தெரிந்துகொண்டனர்.

அதிகப்படியான கர்ப்பிணிப் பெண்கள் ஸ்கேன் செய்ய வருவதையறிந்த இவர்கள் தனியாக ஸ்கேன் இயந்திரத்தை வாங்கி, முறையான அனுமதி இல்லாமல் மறைமுகமாகக் கர்ப்பிணிப் பெண்களுக்கு ஸ்கேன் செய்து, சட்ட விரோதமாகக் குழந்தையின் பாலினத்தைப் பெற்றோர் மற்றும் உறவினர்களுக்குத் தெரிவித்து வந்துள்ளனர். இதற்கு, ஒரு ஸ்கேனுக்கு 30 ஆயிரம் ரூபாயும், புரோக்கர் கமிஷனாக 3 ஆயிரம் ரூபாயும் பெற்றுக்கொண்டு வந்துள்ளனர். இது தவிர சேலம், சின்னசேலம், கள்ளக்குறிச்சி மற்றும் ஆத்தூர் உள்ளிட்ட இடங்களிலும் இவர்கள் வீட்டை வாடகைக்கு எடுத்து இந்த சம்பவத்தை அரங்கேற்றியுள்ளதும் விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்நிலையில், இது குறித்துத் தொடர்ந்து விசாரணை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

# ஈரோடு மேற்கு சட்டமன்றத் தொகுதி விசிக செய்தி தொடர்பாளர் துரை பாலுவை மாற்றம் செய்ய வேண்டும்..

## தொகுதி ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றம்..




ஈரோடு. மார்ச். 27

ஈரோட்டில் நடைபெற்ற விடுதலை சிறுத்தைகள் கட்சி ஈரோடு மேற்கு தொகுதி ஆலோசனை கூட்டத்தில் செய்தி தொடர்பாளர் துரை பாலுவை மாற்றம் செய்ய வேண்டும் என கேட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஈரோடு மாவட்டம் ஈரோடு மேற்கு சட்டமன்றத் தொகுதி விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயற்குழு மற்றும் ஆலோசனைக் கூட்டம் கட்சி அலுவலகத்தில் மேற்கு தொகுதி செயலாளர் தன. விஜயன் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 தேர்தல் அடுத்த மாதம் ஏப்ரல் 23ஆம் தேதி நடைபெற உள்ளது.

இந்த சட்டமன்ற பொது தேர்தலில் திமுக கூட்டணி தலைமையில் ஒரு அணியும். அதிமுக கூட்டணி தலைமையில் ஒரு அணியும். மற்றும் நாம் தமிழர் கட்சி. தமிழக வெற்றி கழகம் தனித்தும் தேர்தலில் களம் காண்கின்றனர்.

இந்த நிலையில் திமுக கூட்டணியில் உள்ள விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு எட்டு சட்டமன்ற தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஈரோடு மேற்கு சட்டமன்றத் தொகுதி செயல் வீரர்கள் கூட்டம் மற்றும் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

நடைபெற இருக்கும் சட்டமன்ற தேர்தலில் பி எல் ஏ 2 தேர்வு செய்வது மற்றும் பயிற்சி அளிப்பது.

கட்சியின் தலைமைக்கு ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதியின் சார்பில் 2 லட்சம் ரூபாய் தேர்தல் நிதியாக அளிப்பது.

விசிகவின் ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதியில் செய்தி தொடர்பாளராக இருந்து வரும் துரை பாலுவை மாற்றம் செய்ய வேண்டும் என மாவட்ட நிர்வாக குழு சார்பில் கட்சியின் தலைமைக்கு பரிந்துரை செய்வது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இந்த கூட்டத்தில் மாவட்ட நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் மகளிர் அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



எதிர்வரும் 23.4.2026 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் நடைபெறுவதை முன்னிடு ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வாக்குப்பதிவு அலுவலர்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளுக்கான பயிற்சி அளிக்கப்படவுள்ள மண்டல அலுவலர்கள் மற்றும் சட்டமன்ற அளவிலான பயிற்சி வல்லுநர்களுக்கான பயிற்சி கூட்டம் நடைபெற்றது.

# பங்குனி உத்திர திருவிழாவையொட்டி பழனி முருகன் கோயிலில் வழிபாட்டு கட்டணம் ரத்து: கோயில் நிர்வாகம் நடவடிக்கை

திண்டுக்கல்: மார்ச்.27–

பங்குனி உத்திர திருவிழாவை முன்னிட்டு, பழனி முருகன் கோயிலில் மார்ச் 31, ஏப்ரல் 1 ,2 ம் ஆகியமூன்றுநாட்களுக்கு சிறப்பு கட்டண தரிசனம் ரத்து செய்யப்பட்டு, அனைத்து பக்தர்களும் கட்டணமின்றி (Free Darshan) சாமி தரிசனம் செய்ய அனுமதிக் கப்படுகிறார்கள்.

திண்டுக்கல் மாவட்டம், பழனி முருகன் கோயிலில் அறுபடை வீடுகளில் 3ம் படை வீடான பழநி திரு ஆவினன்குடி குழந்தை வேலாயுதசுவாமி கோயிலில் பங்குனி உத்திரத் திருவிழா இன்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழாவின் முக்கிய நிகழ்வான தேரோட்டம் ஏப்.1ம் தேதி நடைபெற உள்ளது.

சேவல், மயில், வேல், பாம்பு, சூரியன், சந்திரன் படங்கள் பொறிக்கப்பட்ட கொடிக்கு பூஜை செய்யப்பட்டு கொடியேற்றம் நடைபெற்றது. மூலவர், உற்சவர், விநாயகர், மயில், துவார பாலகர்களுக்கு காப்பு கட்டப்பட்டது. தொடர்ந்து, மூலவர், முத்துக்குமாரசுவாமி, வள்ளி, தெய்வானைக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம் மற்றும் தீபாராதனை நடைபெற்றது.

இதையடுத்து, வள்ளி, தெய்வானை சமேத முத்துக்குமாரசுவாமி பட்டக்காரர் மடத்திற்கு எழுந்தருளல் நிகழ்ச்சி நடைபெற்றது. பங்குனி உத்திர திருவிழாவை முன்னிட்டு ஈரோடு மாவட்டம் கொடுமுடி காவிரி ஆற்றில் இருந்து தீர்த்தம் எடுத்து வந்து, பக்தர்கள் பழநி மலைக்கோயிலில் தண்டாயுதபாணி சுவாமிக்கு அபிஷேகம் செய்து வழிபடுவது வழக்கம். அதன்படி, திரளான பக்தர்கள் இன்று அதிகாலை முதலே தீர்த்த காவடி எடுத்து வந்து தங்கள் நேர்த்திக்கடனை செலுத்தினர்.

10 நாட்கள் நடைபெறும் திருவிழாவில் காமதேனு, ஆட்டுக்கிடா, வெள்ளி யானை, தங்க குதிரை உள்ளிட்ட வாகனங்களில் சுவாமி வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பார். விழாவின் ஆறாம் நாளான மார்ச் 31ம் தேதி இரவு 7 மணிக்கு மேல் திருக்கல்யாணமும், இரவு 9 மணிக்கு மேல் சுவாமி மணக்கோலத்தில் வெள்ளித்தேரில் உலா வருவார். விழாவின் முக்கிய நிகழ்வாக ஏப்.1ம் தேதி பங்குனி உத்திரத்தன்று, நண்பகல் 12 மணிக்கு தேரேற்றம், மாலை 4.30 மணிக்கு மேல் கிரிவலப்பாதையில் தேரோட்டம் நடைபெறுகிறது. ஏப்.4ம் கொடியிறக்குதலுடன் விழா நிறைவடைகிறது.

இந்நிலையில் பங்குனி உத்திரத் திருவிழாவை முன்னிட்டு பழனியில் பக்தர்கள் கூட்டம் அதிகமாக இருப்பதால், குறிப்பிட்ட நாட்களுக்கு கட்டண தரிசனம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது. அனைவருக்கும் விரைவான தரிசனம் கிடைக்கவும் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. கோவிலுக்கு பக்தர்கள் பெருமளவில் திரள வாய்ப்பு இருப்பதால், கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

Published by K.SABIULLA,printed by K.SABIULLA, on behalf of K.SABIULLA, printed at BEAUTIFUL printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:K.SABIULLA, cell.78100-68421